# திராவிடத்தால் வாழ்கிறோம்

907

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

14




ஓவியம் :
ரவி பேலட்

## 1979-ஆம் ஆண்டு சூழ்ந்த பேராபத்து!

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

*1979-ஆம் ஆண்டு ஜூலை 2-ஆம் தேதி சமூகநலத்துறையின் அரசாணை எண்: 1156 மூலம் ஓர் அறிவிப்பை வெளியிட்டார் அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன். அந்த அறிவிப்பு, அதுவரை சாதிக்கப்பட்டிருந்த சமூக நீதி வரலாற்றை, பல பத்தாண்டுகள் பின்னோக்கி இழுக்க வைக்கும் பேரிடியாக அமைந்தது.*

*பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப் பட்டு வந்த, அப்போதைய 31 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பயன்படுத்த புதிய நடை முறையைப் புகுத்துவதாக, அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.*

*அதாவது, ‘பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டைப் பெற, குடும்பத்தின் ஆண்டு வருமானம் 9 ஆயிரம் ரூபாய்க்கு மிகாமல் இருக்க வேண்டும்’ என்றும், அறிவிப்பு உடனடியாக செயல்பாட்டுக்கு வரும் என்றும் அறிவித்திருந்தார் எம்.ஜி.ராமச்சந்திரன்.*

*நூற்றாண்டு காலமாக தொடர்ந்த இட ஒதுக்கீட்டுக்கான போராட்டம் என்பது சாதி ரீதியாக, சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தேவை என்பது வலியுறுத்தப்பட்டு, அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருந்தது தமிழ்நாடு. அந்த முன்னேற்றத்துக்கான தடைக்கல்தான் எம்.ஜி.ஆர். வடிவில் வந்தது.*

### இட ஒதுக்கீடு – பொருளாதார அளவுகோல்

*இந்தியாவில் பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும். அதைப் பயன்படுத்திக்கொண்டு, உயர்சாதியினரில் பெரும் பகுதியினரை ஏழைகள் என்று அறிவித்து, அவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற எண்ணம், அன்றைக்கு ஒன்றியத்தில் ஆட்சி அதிகாரத்தில் கோலோச்சிய பிரிவினருக்கு இருந்தது. இன்று அதை வெளிப்படையாகவே பாரதிய ஜனதா கட்சி செய்துகொண்டிருக்கிறது. 1979-ஆம் ஆண்டில், பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டில், எம்.ஜி.ஆர். உருவில் முயற்சித்துப் பார்க்க எடுக்கப்பட்ட முனைப்பாக அந்த அறிவிப்பு இருந்தது.*

*1953-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட காகா கலேல்கர் தலைமையிலான முதலாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கு ஏன் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் எனத் தெளிவாக விளக்கியது. பொருளாதார அடிப்படையில் உயர்சாதி ஏழைகளுக்கு இட ஒதுக்கீடு அளிக்கலாம் என்ற நேருவின் விருப்பத்தைக்கூட பரிந்துரை அறிக்கையில் சேர்க்க மறுத்தது, ‘காகா கலேல்கர் ஆணையம்’. ‘இட ஒதுக்கீட்டைத் தீர்மானிக்க, சாதிகளைவிட பொருளாதார அளவீடுகளைப் பயன்படுத்தலாம்’ என்பது நேருவின் எண்ணமாக இருந்தது. 1951-ஆம் ஆண்டு முதல் அரசமைப்புச் சட்டத் திருத்த வரலாறே அதைச் சொல்லும்.*

*காகா கலேல்கர் ஆணையத்தின் அறிக்கை நீண்ட காலமாக கிடப்பில் இருந்த நிலையில், 1961-ஆம் ஆண்டு, ‘மாநில அரசுகளே பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை அமைத்துக் கொள்ளலாம்’ என ஒன்றிய அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து, மாநில அரசுகள் இட ஒதுக்கீடு வழங்க, அவற்றுக்கு எதிராக இருந்தன நீதிமன்றத் தீர்ப்புகள். அந்த காலகட்டத்தில் நீதிமன்றங்களும் பொருளாதார அடிப்படை யிலான இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே கொண்டிருந்தன.*

*நீதிக்கட்சி காலத்தில் வழங்கப்பட்டிருந்த, வகுப்புவாரி உரிமையை, உச்சநீதிமன்றம் ஏற்கெனவே செல்லாது என அறிவித்திருக்கிறது. அதன் விளைவாகத்தான் அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. 1960 களில் ஆந்திரா அரசு வழங்கிய இட ஒதுக்கீட்டினை, ‘பொருளாதார அடிப்படையில் இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் பட்டியல் தயாரிக்கப்படவில்லை’ என்று கூறி, அம்மாநில உயர்நீதிமன்றம் இரு முறை ரத்து செய்துள்ளது.*

### கலைஞர் அமைத்த ஆணையம்

*இதையெல்லாம் அறிந்துதான், தமிழ்நாட்டில் 1969-இல் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டுக்கான சட்டநாதன் ஆணையத்தை அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தி இருந்தார் கலைஞர். உருதுபேசும் முஸ்லிம்கள், கொங்கு வேளாளர் சமூகம் ஆகியோரின் கோரிக்கைகளை ஏற்று, அவர்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்த கலைஞர், அதுவரை பிற்படுத்தப்பட்டோ ருக்கு அளிக்கப்பட்டு வந்த 25 சதவிகித ஒதுக்கீட்டை 31 சதவிகிதமாக உயர்த்தியிருந்தார். அதுபோலவே தாழ்த்தப்பட்டோருக்கு 16 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக உயர்த்தியிருந்தார். கல்வி நிலையங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் இடஒதுக்கீடாக 49 சதவிகிதமும், பொதுப்போட்டியில் 51 சதவிகிதத்தில் பல இடங்களைப் பெறக்கூடிய வாய்ப்பினையும் தமிழ்நாட்டில் உருவாக்கி யிருந்தார் கலைஞர்.*

*கழக ஆட்சி மாறியதும், காட்சி மாறியது. 1977 தேர்தலில் வெற்றிபெற்றிருந்த எம்.ஜி.ராமச்சந்திரனிடம், ‘பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கினால், மக்கள் மத்தியில் செல்வாக்கு பெருகும்’ என்று யாரோ தவறான ஆலோசனை கொடுத் துள்ளனர். தவிர, அவரே அப்படி நம்பியவர்தான் என்பதை, அதற்கு முந்தைய ஆண்டுகளில் அவர் ஊடகங்களுக்கு அளித்த நேர்காணல்களின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. எதிர்க்கட்சி யாக இருந்தபோதே, ‘பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஒதுக்கீடு தேவையற்றது’ என்கிற எண்ணத்தை வெளிப்படுத்தியவர். அந்த கருத்துகளின்போதே எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ளன.*

> “சமூகநீதியில் அக்கறை கொண்ட பலரும் கொந்தளிக்கத் தொடங்கினர். முதல் குரல் கலைஞரிடமிருந்து என்பதைச் சொல்லத் தேவையில்லை.”

### முதல் குரல்

*இந்த நிலையில்தான் அவர் முதலமைச்சரா னதும், சமூகநீதி வரலாற்றைப் பின்னோக்கி இழுக்க முனைந்தார். அதுவரை, தெளிந்த நீரோடையாகச் சென்றுகொண்டிருந்த தமிழ்நாட்டின் சமூகநீதி வரலாற்றில், அந்த அறிவிப்பு பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி யது. சமூகநீதியில் அக்கறை கொண்ட பலரும் கொந்தளிக்கத் தொடங்கினர். முதல் குரல் கலைஞரிடமிருந்து என்பதைச் சொல்லத் தேவையில்லை.*

*‘பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீடு சமுதாய ரீதியிலும், கல்வி ரீதியிலும்தான் இருக்க வேண்டுமேயல்லாது, பொருளாதார அடிப்படையில் அவற்றை அளிப்பதென்பதை, பெரியாரும் ஏற்கவில்லை, அண்ணாவும் ஏற்கவில்லை. அண்ணாவின் பெயரை வைத்துக் கொண்டு பேராபத்து ஏற்படுத்த முனைகிறார்கள்” என கொதித் தெழுந்தார் கலைஞர்.*

*சமூகநீதியின் இரட்டைக் குரல் துப்பாக்கியாக திராவிடர் கழகம் துணை நின்றது. திராவிடர் கழகத்தின் அப்போதைய பொதுச்செயலாளர் ஆசிரியர் கி.வீரமணி கொந்தளித்தார். திராவிடர் கழகமும், தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக களத்தில் இறங்கின.*

*05.07.1979 அன்று கலைஞரின் உடன்பிறப்பு கடிதத்தில் ‘இதை எப்படிப் பொறுத்துக் கொள்வது? புரியவில்லை! எவ்வாறு சகித்துக் கொள்வது? விளங்கவில்லை!’ என நீண்ட கடிதம் எழுதிய கலைஞர், கழகத்தின் பொதுக்குழு கூடி போராட்டத்தை அறிவிக்க அன்றே அறைகூவல் விடுத்தார்.*

*அப்போது, புதுச்சேரி மாநில தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்குள்ளாக உள்ளாட்சித் தேர்தல்களை நடத்திவிடுவதற்கும் திட்டமிட்டிருந்தார் எம்.ஜி.ஆர். ஆனால், அவையெல்லாவற்றையும்விட, அதிமுக்கியம் சமூகநீதியை அடித்து நொறுக்குகிற உத்தரவுதான் என கழகத்தினருக்குப் பாடம் எடுத்தார் தானைத் தலைவர் கலைஞர். “உடன்பிறப்பே தேர்தல்கள் எல்லாம் முடியட்டும் என்றில்லாமல் அதற்குள்ளாகவே கழகப் பொதுக்குழுவில் கூடுவோம்” என ஜூலை 14 ஆம் தேதிக்கு அழைப்பு விடுத்தார்.*

...தொடரும்

## பா.ஜ.க.வின் சூழ்ச்சி அம்பலமாகும் காலம்!

அ.தி.மு.க.வின் மூத்த தலைவர் அன்வர் ராஜா கட்சியிலிருந்து விலகி, கழகத்தில் சேர்ந்திருக்கிறார். அது குறித்து, திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை ராஜேந்திரன் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவு, கவனிக்க வைக்கிறது.

“அ.தி.மு.க.– பா.ஜ.க. தேர்தல் கூட்டணி என்பதைவிட, தமிழ்நாட்டு அரசியல் களத்தில் அ.தி.மு.க.வை அகற்றிவிட்டு, பா.ஜ.க., தி.மு.க. என்ற களத்தை உருவாக்குவதே அவர்கள் நோக்கம் என்று அன்வர் ராஜா கூறியிருக்கிறார்.

திராவிடக் கருத்தியலைப் பேசுவது, தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒருவர்தான் என்பதற்காகவே, தி.மு.க.வில் சேர்ந்தேன் என்று தனது நிலையை அவர் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

புத்த மார்க்கத்தை ஆரியம் ஊடுருவி, ஹீனயானம், மகாயானம் என்று இரண்டாகப் பிளந்து, புத்தரின் கொள்கையைச் சிதைத்ததை, வரலாறு நமக்குப் பாடமாக உணர்த்திக் கொண்டிருக்கிறது. பெரியார் இந்த ஆபத்தைத் தொடர்ந்து, சுட்டிக்காட்டி வந்திருக்கிறார்.

கூட்டணியாகக் கைகோத்து, பிறகு கூட்டணி சேர்ந்த கட்சியை அழித்து, தனது அதிகாரத்தை நிலைப்படுத்தும் பா.ஜ.க.வின் சூழ்ச்சியை, தமிழ்நாடு தெளிவாகப் புரிந்துவைத்திருக்கிறது. அன்வர் ராஜா பதவி விலகல் உணர்த்தும் உண்மை இது. பா.ஜ.க.வுடன் கூட்டணியை நியாயப்படுத்த முயற்சித்த எடப்பாடி, அதில் தோல்வி கண்டு இப்போது, ‘நாங்கள் ஏமாளிகள் அல்ல’ என்ற குரலில் பேசத் துவங்கி இருக்கிறார். இவை அனைத்துமே மக்களை ஏமாற்றும் குரல் என்பதை, அன்வர் ராஜா விலகல் உறுதிப்படுத்தி விட்டது.

பா.ஜ.க. பயன்படுத்தும் ஆளுநர் அதிகார அரசியலை வெற்றி கரமாக எதிர்கொண்டு, ஆளுநரை மாளிகைக்குள் அதிகாரமின்றிஉட்கார வைத்து விட்டார் தமிழ்நாடு முதலமைச்சர். இப்போது கூட்டணி வழியாக காலூன்ற நினைக்கும் பா.ஜ.க. சூழ்ச்சி அரசியலின் முகத்திரையும் கிழிய தொடங்கி விட்டது” என்கிறது அந்தப் பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### தொண்டர் அணிச் சீருடையில் தலைவருடன்...



கே.பி.இராஜேந்திரன்

1992-ஆம் ஆண்டு சென்னைக்கு வேலை தேடி வந்து, நண்பர்களுடன் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தங்கி இருந்தேன். அப்போது, கழகத்தின் தொண்டர் அணியில் பணியாற்றும் வாய்ப்பு முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநிலங்களவை உறுப்பினருமாக இருந்த அய்யா எஸ்.சிவசுப்ரமணியம் அவர்கள் மூலம் கிடைத்தது. ஒருநாள் அன்பகத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்தபோது, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களுடன் எடுத்துக் கொண்ட படம் இது. தளபதி அவர்களின் வெளியூர் நிகழ்ச்சிகளுக்கும் பாதுகாப்புப் பணிக்குச் சென்றுள்ளேன். 1995-ஆம் ஆண்டுக்குப் பின்னர், சொந்த ஊருக்கு வந்து கிளைக் கழகச் செயலாளராகப் பணியாற்றினேன்.

**– கே.பி.இராஜேந்திரன், முன்னாள் கிளைக் கழகச் செயலாளர், திருமாந்துறை ஊராட்சி, பெரம்பலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தி.மு.க. முத்தமிழ் மாநாடு!

18.04.59, 19.04.59 ஆகிய இரண்டு நாட்களில் தி.மு.கழக முத்தமிழ் மாநாடு காரைக்காலில் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா, நாவலர், கலைஞர் உள்பட கழக முன்னணித் தலைவர்கள், சொற்பொழிவாளர்கள், கழகத் திரை நட்சத்திரங்கள் கலந்துகொண்டனர். கலைஞரின் ‘உதயசூரியன்’ நாடகமும் நாகூர் அனீபாவின் இன்னிசையும் நடைபெற்றன.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.